**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்</u>**

அ.வ.எண். 69/2020

பெயர் – சரவணன்(வா.சா.1)

நாள் – 31.10.2025

**<u>7 முதல் 11 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை.</u>**

1) நான் என்ன படித்துள்ளேன் என்றால் 9ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு சரளமாக எழுத படிக்க தெரியும் என்றால் ஓரளவுக்கு தெரியும். நான் பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சொத்தில் பங்கு பிரிக்க கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். எத்தனை சொத்துக்கள் பங்கு பிரிக்க கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் 8 சொத்துக்கள் ஆகும்.

2) சக்கணத்தேவர் என்னுடைய தாத்தா என்றால் சரிதான். சக்கணத்தேவர் எப்போது பிறந்தார், அவருடன் பிறந்தவர்கள் குறித்து எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. சக்கணத்தேவருக்கு கிடைத்த பரம்பரை சொத்துக்கள் என்னென்ன என்று எனக்கு தெரியுமா என்றால் தாவா வழக்கின் 8 சொத்துக்கள் அனைத்தும் அவரின் பூர்வீக சொத்தாகும். மேற்படி தாவா வழக்கின் 8 சொத்துக்களை தவிர்த்து வேறு பூர்வீக சொத்து அவருக்கு உள்ளதா என்பது குறித்து எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

3) தாவா வழக்கின் சொத்துக்கள் சக்கணத்தேவரின் பூர்வீக சொத்தா அல்லது சுயசம்பாத்திய சொத்தா என்பது குறித்து எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது. தாவா வழக்கு சொத்து வாங்கியதற்கான ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது தாத்தா சக்கணத்தேவர் மற்றும் அவரது மனைவி மீனம்மாள் ஆகிய இருவரும் அரசு பள்ளி ஆசிரியர் என்றால் சரிதான். மேற்படி சக்கணத்தேவரும், அவரது மனைவியும்(மீனம்மாள்) ஒரே பள்ளியில் ஆசிரியராக பணிபுரிந்த விபரமும், அவர்களுக்கு எப்போது திருமணம் நடைபெற்ற விபரமும் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

4) சக்கணத்தேவர் என்பவருக்கும் மாயக்காள் என்பவருக்கும் எப்போது திருமணம் நடைபெற்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மீனம்மாள் தான் சக்கணத்தேவரின் முதல் மனைவி என்றால் சரியல்ல. தவிர்க்க முடியாத காரணத்தினால் தான் மீனம்மாள் தனது சகோதரி மாயக்காளை சக்கணத்தேவருக்கு

மணம் முடித்து வைத்தார் என்றால் சரியல்ல. மாயக்காளுக்கு தனிப்பட்ட வருமானம் எதுவும் கிடையாது என்றால் சரிதான்.

5) மீனம்மாள் தான் தனது மக்களையும், மாயக்காள் மக்களையும் வளர்த்தார்கள் என்றால் சரியல்ல. சக்கணத்தேவர், மீனம்மாள், மாயக்காள் எப்போது இறந்தார்கள் என்பது குறித்து எனக்கு தெரியுமா என்றால் மீனம்மாள், மாயக்காள் ஆகியோர் இறந்தது குறித்து எனக்கு தெரியும். மேற்படி நபர்களின் இறப்பு சான்றிதழை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. சக்கணத்தேவர் மற்றும் மீனம்மாளின் வாரிசு சான்றிதழை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

6) நான் தாக்கல் செய்துள்ள வாதுரையில் ருக்மணி மகன் 11ம் பிரதிவாதி அய்யாத்துரையை வாரிசாக விட்டுவிட்டு இறந்ததாக கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். ருக்மணி இறக்கும் சமயத்தில் அய்யாத்துரை, சுப்புலட்சுமி, அவரது கணவரை வாரிசாக விட்டுவிட்டு சென்றது குறித்து எனக்கு தெரியுமா என்றால் தெரியும். வாதுரையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யும் போது சுப்புலட்சுமி என்பவர் உயிருடன் இருந்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் அந்த சமயத்தில் சுப்புலட்சுமி இறந்துவிட்டார். ருக்மணி எப்போது இறந்தார், அவரது வாரிசுகள் யார் என்பது குறித்து எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

7) சக்கணத்தேவர் மற்றும் மீனம்மாள் இவர்களின் மகன் திருஞானசம்பந்தமூர்த்தி என்பவர் 50 ஆண்டுகளுக்கு முன்பு அசாம் கே.வி பள்ளியில் ஆசிரியராக இருந்த விபரமும், அவர் ஊர் திரும்பவில்லை என்ற விபரமும் எனக்கு தெரியுமா என்றால் ஆசிரியராக இருந்து அங்கேயே இறந்துவிட்டார். திருஞானசம்பந்தமூர்த்திக்கு வாரிசுகள் இருந்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் அவருக்கு திருமணமே ஆகவில்லை. திருஞானசம்பந்தமூர்த்தி இறந்தது குறித்தும், வாரிசுகள் குறித்தும் நீதிமன்றத்தில் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

8) தாவா வழக்கில் 6-ம் இலக்க சொத்தை எனது தந்தையின் தகப்பனார் சக்கணத்தேவர் 21.09.1943-ல் கிரைய பத்திரத்தின் மூலம் பாத்தியப்பட்டது என்று எனது பிராதில் கூறியுள்ளேனா என்றால் கூறவில்லை. மேற்படி கிரைய பத்திரத்தை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சக்கணத்தேவர் மேற்படி

சொத்தை யாரிடமிருந்து கிரையம் வாங்கினார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. 6ம் இலக்க சொத்தின் நான்கு பக்கமும் உள்ள அளவுகள் குறித்து எனக்கு தெரியுமா என்றால் மொத்தமாக 2 ஏக்கர் 5 சென்ட் ஆகும், குறிப்பிட்டு நான்கு பக்க அளவுகள் கூற இயலாது. 6-ம் இலக்க சொத்தின் நான்கு எல்லைகளை வழக்குரையில் கூறவில்லை என்றால் சரிதான். வழக்கின் 6ம் இலக்க சொத்தை நவநீதகிருஷ்ணன் 18ம் பிரதிவாதிக்கு அடமான வைத்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

9) 6-ம் இலக்க சொத்து நவநீதகிருஷ்ணனுக்கு மட்டும் பாத்தியப்பட்டதால் தான் 18ம் பிரதிவாதிக்கு அடமான வைத்தார் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தானது சக்கணத்தேவரின் பூர்வீக சொத்து என்ற சங்கதியே தவறு என்றால் சரியல்ல. மீனம்மாள் மற்றும் மாயக்காள் அவர்களுடன் பிறந்தவர்கள் எத்தனை பேர் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வழக்கில் உள்ள சொத்துக்கள் அனைத்துமே மீனம்மாள் மற்றும் மாயக்காள் அவர்களின் தந்தை ஈஸ்வரமூர்த்திக்கு சொந்தமானது என்றால் சரியல்ல.

10) ஈஸ்வரமூர்த்தி இறந்த பின்னர் மீனம்மாள் தான் தனது மற்ற சகோதரர சகோதரிகளுக்கு பணத்தை கொடுத்து தனது சகோதரி மாயக்காள் பெயரிலும், அவரது மகன் நவநீதகிருஷ்ணன் பெயரிலும் வாங்கினார் என்றால் சரியல்ல. எனது அப்பாவிற்கு 6வயது இருக்கும் போதே சக்கணத்தேவர் இறந்துவிட்டார் என்றால் அதுகுறித்து எனக்கு தெரியாது. எனது தந்தையை வளர்த்தது, படிக்க வைத்தது மீனம்மாளின் வருமானத்தை வைத்து தான் என்றால் சரியல்ல.

11) மீனம்மாள் தனது சுயசம்பாத்தியத்தில் வாங்கிய வழக்கின் 4-ம் இலக்க வீட்டை தனது மகன் வழி பேரன் அருள்ஜோதிக்கு(7ம் பிரதிவாதி) சாத்தூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண.எண்.2/1997 மூலம் பதிவு செய்யப்பட்ட உயில் மூலம் எழுதி வைத்துள்ளார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் வழக்கு தாக்கல் செய்த பின்பு தான் தெரியவந்தது. மீனம்மாள் எந்த ஆண்டு இறந்தார் என்பது குறித்து எனக்கு தெரியுமா என்றால் 1998-ல் இறந்தார். மீனம்மாள் இறப்பதற்கு முன்பாக திடகாத்திறமாக இருந்தார் என்றால் சரியல்ல, உடம்பு முடியாமல் தான் இருந்தார். மீனம்மாள் இறப்பதற்கு முந்தைய இரவு வரையில் நல்ல சுயநினைவுடனும், கண் பார்வையுடனும் இருந்தார் என்றால் சரியல்ல.

12) மீனம்மாள் பெயரில் வழக்கின் 4–ம் இலக்க சொத்திற்கு பட்டா பெற்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் மீனம்மாளுக்கு தனிப்பட்ட சொத்து எதுவும் கிடையாது. 6ம் இலக்க சொத்து நவநீதகிருஷ்ணன் பெயரில் பட்டா உள்ள விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும், அது போலி பட்டா ஆகும். 50 ஆண்டுகளுக்கு முன்பே மாயக்காளும், மீனம்மாளும் தனக்குரிய சொத்தை பிரித்து விட்டார்கள் என்றும், அதன் பொருட்டு அவரவர் உரிய சொத்தை அனுபவித்து வந்தார்கள் என்றால் சரியல்ல, சொத்துக்கள் பிரிக்கப்படவில்லை.

13) 1970ம் ஆண்டு முதல் வழக்குரை சொத்தான 4 மற்றும் 6 இலக்க சொத்துக்களை மீனம்மாள் மற்றும் நவநீதகிருஷ்ணன் ஆண்டு அனுபவித்து கொண்டிருக்கிறார்கள் என்றால் சரியல்ல. வழக்குரை சொத்தான 4 மற்றும் 6 இலக்க சொத்துகளுக்கு நவநீதகிருஷ்ணன் மற்றும் அவரது வாரிசுகளே பாத்தியப்பட்டவர்கள் என்றால் சரியல்ல. அதே போல் ஒரே மகளான ருக்மணி மற்றும் அவரது வாரிசுகளுக்கு வழக்குரை சொத்தான 4 மற்றும் 6 இலக்க சொத்துகளுக்கு எந்த உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல.

14) வழக்குரை சொத்தான 4 மற்றும் 6 இலக்க சொத்துகளுக்கு உரிமை இருந்திருந்தால் எனது தகப்பனாரே உரிமை கோரியிருப்பார் என்றால் சரிதான், எனது அப்பா உயிருடன் இருக்கும் போதே பங்கு கேட்டார். மாயக்காளுக்கு கொடுக்கப்பட்ட வழக்குரை சொத்தான 5ம் இலக்க சொத்தான வீட்டில் எனது தந்தைக்கு உரிமை இருந்ததால் தான் எனது தந்தை அந்த வீட்டிற்கு அவரது பெயரில் பட்டா ஏற்படுத்தியுள்ளார் என்றால் சரியல்ல, அவர் பெயரில் பட்டா கிடையாது.

15) வழக்கு போட்ட பின்பு தான் ஆவண.எண்.2/1997 ஆன உயில் குறித்து எனக்கு தெரியும் என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் எனது தந்தை சாட்சியாக கையொப்பமிட்ட விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எனது வழக்குரையில் மீனம்மாள் அருள்ஜோதிக்கு உயில் எழுதி வைத்த விபரம் 05.08.2022 அன்று தான் எனக்கு தெரியும் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி உயில் எழுதியதை தெரியவந்த பின்பு உயிலை ரத்து செய்வதற்கான முயற்சி எடுத்தேனா என்றால் இல்லை, அதற்காக தான் வழக்கு தொடுத்தேன்.

16) எனது வாதுரையில் நவநீதகிருஷ்ணன் 18ம் பிரதிவாதிக்கு 6ம் இலக்க சொத்தை அடமானம் வைத்து அந்த அடமான சான்று சாத்தூர் சார்பதிவாளர்

அலுவகத்தில் அந்த ஆவண.எண்.90/1975 என்று பதிவு செய்துள்ள விபரம் அதே 05.08.2022 அன்று தெரியும் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான், மேற்படி ஆவண.எண்.90/1975 ரத்து செய்வதற்காக முயற்சி எடுத்துள்ளேனா என்றால் இல்லை.

17) மாயக்காள் இறந்த வருடம் 2004 என்றால் சரியல்ல, 2002ம் ஆண்டு இறந்தார். நவநீதகிருஷ்ணன் வாரிசுகள் அனைவரும் சென்னையில் தான் வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான். நானும், எனது வகையறாவும் சேர்ந்து போலி ஆவணங்களை தயாரித்து அரசு அதிகாரிகளை ஏமாற்றி நவநீதகிருஷ்ணன் பெயரில் மட்டும் இருந்த 6ம் இலக்க சொத்தின் பட்டாவில் 2004 ஆண்டில் இறந்து போன மாயக்காள் பெயரை 11.05.2015 அன்று கெட்ட எண்ணத்தில் நிலத்தை அபகரிக்கும் பொருட்டு சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல.

18) நவநீதகிருஷ்ணன் வாரிசுதார்கள் சென்னையில் வசித்து வருவதால் அவர்களுக்கு தெரியாமல் அவர்களுக்கு பாத்தியப்பட்ட 6–ம் இலக்க சொத்திற்குள் நானும், எனது வகையாட்களும் அத்துமீறி நுழைந்து விவசாயம் செய்து வருகிறோம் என்றால் சரியல்ல. நான் இன்று வரை பிரதிவாதிகளுடன் நல்ல உறவில் இருந்து வருகிறேன் என்றால் சரிதான். தாவா சொத்தில் எனக்கு எந்த உரிமையும் கிடையாது என்ற உண்மை எனக்கு தெரிந்தும் நீதிமன்றத்தின் நேரத்தை வீணடித்து கொண்டிருக்கிறேன் என்றால் சரியல்ல.

19) நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கதக்கதல்ல என்றும், இந்த வழக்கானது தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்றால் சரியல்ல.